# 12

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# எதற்குள் ஞானஸ்நானப்படுத்தப் படுகிறோம்?

"Into" (க்குள்) என்ற வார்த்தையின் அர்த்தத்தில் நிலைத்திருந்து அதைத் தெளிவு படுத்தும் முயற்சியொன்றை மேற்கொள்ளத் தேவையற்ற அளவு இவ்வார்த்தையானது ஆங்கிலம் பேசும் மக்களிடையே நன்கு அறியப்பட்ட வார்த்தையாக உள்ளது. இருந்த போதிலும், களைப்புற்று விடும் இடர்ப்பாட்டில் இருக்கையிலும், இதன் திட்டவட்டமான நிலைத்த அர்த்தத்தின்மீது விசேஷ கவனத்தைச் செலுத்தும்படி அழைக்கின்றேன். இது சில ஆத்துமாக்களுக்கு சத்தியத்தின் தெளிவான கண்ணோட்டத்திற்கு உதவலாம்; அப்படியென்றால், இந்த ஒன்றிற்காக மற்றவற்றை நாம் சோர்வுறச் செய்ய முடியும்.

இந்த வார்த்தையின் பயன்பாட்டை நாம் விவரிப்போம். யாரேனும் ஒருவர் வந்து, ஒரு தாயிடம் அவள் மகன் கிணற்றிற்''குள்'' விழுந்து விட்டான் என்று அறிவித்தால், அக்குழந்தை எங்கிருக்கும் என்பதை அந்தத் தாய் மிகச் சரியாக அறிந்திருப்பாள்; அவள் உடனடியாக ஓடத் தொடங்கி, அந்தக் கிணற்றண்டைக்கு வரும் வரையிலும் நில்லாமல் ஓடுவாள். அந்தக் குழந்தையைக் கிணற்றில் இருந்து "வெளியே" எடுக்க எல்லா முயற்சியும் மேற்கொள்ளப்படும். அது போலவே, ஒரு வீட்டிற்"குள்" திருடன் ஒருவன் புகுந்து விட்டான் என்று உறுதியான முறையில் ஒருவரால் அறிவிக்கப் பட்டால், காவல் அதிகாரி அத்திருடனுக்காக வெளியில் தேடிக் கொண்டிருக்க மாட்டார். ஒரு மகன் தனது தந்தையிடம், கோவேறுக் கழுதைகள் மக்காச் சோள வயலி''னுள்'' தாவி ஓடி விட்டன என்று கூறினால், அந்தத் தந்தை மேலும் எவ்வித விளக்கமும் இன்றியே, அந்தக் கோவேறுக் கழுதைகள் தாங்கள் இருக்க வேண்டிய இடமான நிலம் அல்லது மேய்ச்சல் நிலத்திலிருந்து "வெளியே" தாவி, மக்காச் சோள வயலுக்"குள்" நுழைந்திருந்தன என்பதைப் புரிந்து கொள்வார்.

''க்குள்'' என்பதன் அர்த்தமானது நாம் எப்பொழுதும் ''காணுகின்ற''படியாக அல்லது புரிந்து கொள்ளுகின்றபடியாக ஒன்று போலவே நிலைப்படுத்தப்பட்டு திட்டவட்டமானதாக உள்ளது. அதன்

ஒவ்வொரு பயன்பாட்டிலும், நாம் ஒன்றிலிருந்து ''வெளியேறி'' இன்னொன்றிற்"க்குள்" வருவதை யூகிக்கின்றோம். கோவேறுக் கழுதைகள் சோள வயலுக்"குள்'' தாவிய பொழுது, அவைகள் அதற்கு முன்பிருந்த இடத்தில் இருந்து "வெளியே" தாவும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன. இது ஒரு முற்றான தேவையாகவும் மற்றும் ஒவ்வொரு நபரும் இதனை இவ்வழியில் ''கண்டு'' மற்றும் இந்தப் பயன்பாட்டிற்கு ஒத்துக் கொள்வதாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்ட வாக்கியங்களில் "க்குள்" என்பதன் அர்த்தம் பற்றி ஒவ்வொரு வாசகரும் மற்ற ஒவ்வொருவருடனும் முற்றிலுமாக ஒன்றித்திருப்பார். இதன் அர்த்தத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளுதல் என்பது முற்றிலும் சாத்தியமற்றதாக உள்ளது. "க்குள்" என்ற (into) எளிய வார்த்தை அடங்கியதும், விளக்கத்தின்போது, "க்குள்" என்ற வார்த்தை யானது இரு நேர்மையான இருதயங்களால் தவறாகப் புரிந்து கொள்ளும் படி வழிநடத்தப்படுவதுமான வகையில் ஒரு தமிழ் வாக்கியக் கட்டமைப் பைச் செய்ய ஒருவர் முயற்சி செய்வதைக் காண்பதற்கு நான் ஆர்வமாய் உள்ளேன்.

ஒரு கோவேறு கழுதையானது தான் ஏற்கனவே ஓரிடத்தில் இருக்கும் பொழுது, அந்த இடத்திற்"குள்" தாவி வர முடியுமா? ஒரு குழந்தை ஏற்கனவே ஒரு கிணற்றிற்"குள்'' இருக்கும் பொழுது, அது அந்தக் கிணற்றிற்"குள்" விழ முடியுமா? எந்த ஒரு பொருளாவது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வெளியே முதலாவது இராமல், அந்த இடத்திற்"க்குள்'' கடந்து, அந்த இடத்திற்"குள்" குதித்து, அந்த இடத்திற்"குள்" விழுந்து அல்லது வேறு எவ்வகையிலாவது அந்த இடத்தினுள் பிரவேசிக்க முடியுமா! ஒரு இளம் பெண் ஏற்கனவே திருமணமாகியிருக்கையில், அதன் பிறகு அவள் திருமண உறவில் (புதிதாய்) நுழைய முடியுமா? அவள் திருமணம் ஆகும் முன்பு அந்த உறவிற்கு வெளியே இருந்தாள்; ஆனால் திருமணத்"தில்'' அவள் அந்த உறவுக்"குள்'' கடந்து வருகின்றாள் மற்றும் அதன் பிறகு அந்த உறவிற்"குள்" நிலைத்திருக்கின்றாள்.

இப்பொழுது, "க்குள்'' என்பதற்குத் தெளிவாய் விளக்கப்பட்ட இந்த அர்த்தத்துடன், பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்த தெளிவான சில வேத வசனப் பகுதிகளை ஆராயும்படி நேர்மையான இருதயங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்:

> *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து (மத். 28:19).*

> *அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 19:5).*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர் 6:3).*

> *எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு (1 கொரி. 12:13ஆ).*

*உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலா. 3:27).*

*ஆகையால், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், உன்னதத்திலிருந்து வந்த வல்லமையினால் தூண்டப்பட்ட, தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் மக்களைப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்"குள்ளாக"* (eis) *ஞானஸ்நானப்படுத்தினார்கள். அவர்களைக் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்"குள்ளாக"* (*eis*) *ஞானஸ்நானப்படுத்தினார்கள். அவர்களைக் கிறிஸ்துவுக்"குள்ளாக"* (*eis*) *ஞானஸ்நானப்படுத்தினார்கள். அவர்களைக் கிறிஸ்துவின் மரணத்திற்"குள்ளாக"* (*eis*) *அவர்கள் ஞானஸ்நானப் படுத்தினார்கள். அவர்களை ஒரே சரீரத்திற்"குள்ளாக"* (*eis*) *அவர்கள் ஞானஸ்நானப்படுத்தினார்கள். அவர்களைக் கிறிஸ்துவுக்"குள்ளாக"* (*eis*) *அவர்கள் ஞானஸ்நானப்படுத்தினார்கள்; இவ்விதமாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவரை அணிந்து கொண்டார்கள். நிறைவாக, மக்களின் பாவ மன்னிப்புக்"கென்று" அல்லது "உள்ளாக" அவர்களை அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானப் படுத்தினார்கள்.*

*இவ்வசனப் பகுதிகளில் உள்ள "க்குள்ளாக"* (into) *என்ற வார்த்தைக்கு இருபொருளற்ற அர்த்தத்தை நாம் கொடுத்தால், தவறான புரிந்து கொள்ளுதல் இருக்க முடியாது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் மக்கள் தங்களின் ஞானஸ்நானத்திற்கு முன்பாக, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்கு "வெளியே" இருந்தார்கள், கிறிஸ்துவின் மரணத்திற்கு "வெளியே" இருந்தார்கள், ஒரே சரீரத்திற்கு "வெளியே" இருந்தார்கள். கிறிஸ்துவுக்கு "வெளியே" இருந்தார்கள் மற்றும் பாவமன்னிப்புக்கு "வெளியே" இருந்தார்கள். ஞானஸ்நானத்தினால் அவர்கள் பரிசுத்த மானதும் தெய்வீகத்தினால் உண்டாக்கப்பட்டதுமான இந்த உறவுமுறை கள் மற்றும் ஆசீர்வாதங்கள் ஆகியவற்றில் பிரவேசித்தார்கள்.*

*ஆகையால், பரிசுத்த நாமங்களுக்குள் பிரவேசிப்பதால், கிறிஸ்துவின் மரணத்தில் பிரவேசிப்பதால், கிறிஸ்துவின் பரிசுத்த சரீரத்தில் பிரவேசிப்ப தால், கிறிஸ்துவுக்குள்ளாகவே பிரவேசிப்பதால், மற்றும் பாவமன்னிப் பினிடத்தில் வருவதால் பெறக் கூடிய ஆசீர்வாதங்கள் எவையும், வேத வசனத்தின்படியான ஞானஸ்நானத்தைச் சார்ந்துள்ளன. இது இவ்வாறு தான் இருக்க வேண்டும், இல்லையென்றால், மொழியானது சிந்தனையை ஏற்ற வகையில் வெளிப்படுத்தத் தகுதியான கருவியல்ல என்று ஆவதுடன், பேச்சின் வல்லமையினால் நமக்கு வெளிப்படுத்தப்படும் எதையும் நாம் உண்மையில் சார்ந்திருக்க முடியாது என்றாகிவிடும்.*

*அழுது புலம்பிக் கொண்டிருந்த தர்சுப் பட்டணத்துச் சவுலுக்கு, அனனியா, "... நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16) என்று கூறியதில் வியப்பெதுவும் இல்லை. பேதுரு, "... சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையாக ஞானஸ்நானமானது ... இப்பொழுது நம்மையும் ... இரட்சிக்கிறது" (1 பேது. 3:20, 21) என்று கூறியதில் வியப்பெதுவும் இல்லை.*

பரிசுத்த மனிதர்கள் எவ்விதம் வேறு வகையில் போதித்திருக்கக் கூடும்? இயேசு தமது கடைசியான மற்றும் நிறைவான கட்டளைகளைக் கொடுத்ததில், ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற். 16:15, 16) என்று கூறியிருந்தார். மெய்யாகவே, தக்க வகையில் தயார் செய்யப்பட்ட இருதயமானது, வசன ரீதியான ஞானஸ்நானத்தின் முடிவில் இரட்சிக்கப்படுகின்றது என்று இயேசுவும் ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்களும் போதிக்காதிருந்திருந்தால் அது மனிதரின் பேச்சினால் செய்யப்பட முடியாது.

மீண்டும் ஒருமுறை நான் நேர்மையான இருதயங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். ஞானஸ்நானத்திற்கு இரட்சிப்புடன் அல்லது பாவமன்னிப்புடன் உள்ள உறவைப் பற்றிய விஷயத்தைப் பரிசுத்த ஆவியானவர் இவ்வளவு எளிமையாகவும் தெளிவாகவும் போதித்திருக்கை யில் நாம் குழுக்களாய்ப் பிரிந்து சாலையில் எவ்விதம் "பிரிந்து போகுதலை" ஏற்படுத்த முடியும்? ஒரே காரியத்தைப் பேசும்படியும், நமக்குள் பிரிவினையின்றி ஒரே சிந்தையுடன் ஒரே மனமும் உள்ளவர்களாயிருக்கும் படியும் நமது கர்த்தர் வேண்டுகோள் விடுக்கின்றார். உண்மையும் நேர்மையும் உள்ள இருதயங்கள் இயேசுவுக்கு விசுவாசமாயிருக்கத் தொடர்ந்து, அதே வேளையில், பரிசுத்த ஆவியானவரின் இருபொருளற்ற போதனையில் பிரிவினைகளை உண்டாக்குதல் எவ்விதம் என்பது எனது புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அவர்கள் நேர்மையுடன் இருப்பதாக உரிமைகோரிக்கொண்டு, பிரிவினையில் தொடர்ந்து இருத்தல் என்பது நான் காண முடியாததாக உள்ளது. நமது கர்த்தரின் தெளிவான இருபொருளற்ற போதனை இருக்கும் பொழுதே பிரிவினைகள் வேண்டுமென்றே உற்சாக மூட்டப்படும் பொழுது, தீமையும் பாவமும் கதவருகில் பதுங்கியிருப்பது நிச்சயம்.

"குழுக்கள்," "கோட்பாடுகள்" மற்றும் நாமகரணத்துவம் ஆகியவற்றை விட்டுவிட மனதாயிருக்கின்ற யாவரும் கிறிஸ்தவர்களாக மட்டும் - பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவான் ஆகியோரைப் போன்ற கிறிஸ்தவர்களாக மட்டும் - இருப்பதில் திருப்தியும் மகிழ்ச்சியும் அடையும்படி மறுபடியும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். நாம் எருசலேமின் சபையில் இருந்த உறுப்பினர்களைப் போன்ற கிறிஸ்தவர்களாக - புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் இருந்த கிறிஸ்தவர்கள் எல்லாரையும் போன்றவர்களாக - மட்டும் இருப்போம். மரித்துக் கொண்டிருந்த இரட்சகரின் ஊக்கமான ஜெபம் மீண்டும் உண்மை நிலையை அடைவதாக! இயேசுவினிமித்தம் நாம் ஒன்றாயிருக்கும்படி பரிசுத்த ஆவியானவரால் கேட்டுக்கொள்ளப்படாத எதையும் மற்றும் எல்லாவற்றையும் விட்டு விட நம்மில் மனதாயிருப்பவர் யார்? ஒருமைப்பாட்டின் இந்தக் காட்சியானது நமது கர்த்தரைப் பிரியப்படுத்தும்; மற்றும் அதன் மூலம், தேவன் அவரை அனுப்பினாரென்று இழந்துபோகப்பட்ட உலகம் விசுவாசிக்கலாம். கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கும்படி உண்மையான இருதயங்களை அசைக்கின்ற எதுவும் இல்லையா?